ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2143/18 - 2019 ඔක්තෝබර් මස 02 වැනි බදදා - 2019.10.02

*2143/18 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

***1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)***

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 06/03/1/518.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ஹொரணை பிரதேச செயலகப் பிரிவின் மில்லேவ, கிதெல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ள, நில அளவை நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட 2019.06.11 ஆந் திகதிய பூர்வாங்க மாதிரிப்பட இல. 4732 இல் அமைந்துள்ள, 26.7833 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டு இல. 1 முதல் 9 வரையிலான காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு :

**01. துண்டு இல. 01**

காணியின் பெயர் : கொஸ்கொட்டுவ; விபரம் : தோட்டம் இறப்பர் பயிர்ச்செய்கை 5 வருடங்கள் கொண்டது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 3.7250 ஹெக்டயார்.

**02. துண்டு இல. 02**

காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.4341 ஹெக்டயார்.

**03. துண்டு இல. 03**

காணியின் பெயர் : கொஸ்கொட்டுவ; விபரம் : தோட்டம் இறப்பர் பயிர்ச்செய்கை 5 வருடங்கள் கொண்டது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 20.0935 ஹெக்டயார்.

**04. துண்டு இல. 02**

காணியின் பெயர் : - ; விபரம் : வீதி; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 0.2391 ஹெக்டயார்.



இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.

05. **துண்டு இல. 05**

காணியின் பெயர் : கொஸ்கொட்டுவ; விபரம் : தோட்டம் இறப்பர் பயிர்ச்செய்கை 5 வருடங்கள் கொண்டது; உரிமை கோருவோர் : அரசு; ஆரம்ப உரிமை கோருவோர் : காணிச் சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 2.2916 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2019 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி மு. ப. 10.00 மணிக்கு ஹொரணை பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும், மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகைகளையும், அத்தொகை கணிக்கப்பட்ட விபரங்களையும் 2019 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எச். ஏ. கமல் புஷ்பகுமார,
பிரதேச செயலாளர்,
ஹொரணை.

பிரதேச செயலகம்,
ஹொரணை,
2019, செத்தெம்பர் 18.

10 - 540

திருத்தம்

## 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

பிரதேச செயலாளர் குறிப்பு இல.: DIK/LAN/ 03/05.

மேலே குறிப்பிடப்பட்ட தலைப்பின் கீழ் 2014.03.24 ஆந் திகதியின் 1855/ 17 ஆம் இலக்கமுடைய, அதி விசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட காணி எடுத்தற் சட்டத்தின் 7 ஆம் பிரிவின் கீழ் மு. பி. பட. இல. மாற 2550 ஆரம்பப் படத்தில் காட்டப்பட்டுள்ள 12 ஆம் இலக்கம் கொண்ட காணித் துண்டின் விஸ்தீரணம் சுமார் 0.0147 ஹெக்டயார் என குறிப்பிடப்பட்டுள்ள அளவினை 0.0144 ஹெக்டயார் ஆக திருத்தி அமைக்கப்படும் என இதன் மூலம் வெளிப்படுத்துகின்றேன்.

பீ. எஸ். ரன்ஜித,
பிரதேச செயலாளர்,
திக்வெல்லை.

பிரதேச செயலகம்,
திக்வெல்லை,
2019, செத்தெம்பர் 16.

10 - 541

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.